**பத்திரிகை வெளியீடு**

கொழும்பு, 23 நவம்பர் 2017

Nestlé
Good Food, Good Life

**நெஸ்லே நிறுவனத்தின் *Maggi* மற்றும் *Nestomalt* ஆகிய வர்த்தகநாமங்கள் Kantar World Panel பட்டியலில் இலங்கையில் முதல் 10 இடங்களிலுள்ள விரைவாக விற்றுத் தீருகின்ற நுகர்வோர் உற்பத்திகளாக இடம்பிடித்துள்ளன**

நெஸ்லே நிறுவனத்தின் இரு புகழ்பூத்த வர்த்தகநாமங்களான *Maggi* மற்றும் *Nestomalt* ஆகியன Kantar World panel ஆராய்ச்சி நிறுவனம் சமீபத்தில் முன்னெடுத்த வர்த்தகநாம தனிச்சிறப்பு தொடர்பான ஆய்வில் இலங்கையில் முதல் 10 இடங்களிலுள்ள விரைவாக விற்றுத் தீருகின்ற நுகர்வோர் உற்பத்திகளாக பெயரிடப்பட்டுள்ளன. நூடில்ஸ் மற்றும் மோல்ற்று உணவுப் பான வகைகளில் முதல் 10 இடங்களில் இடம்பெற்றுள்ள உற்பத்திகளாக இவை மட்டுமே அமையப் பெற்றுள்ளன. ஐந்து மில்லியனுக்கும் அதிகமான வீடுகள், 400 வர்த்தகநாமங்கள் மற்றும் 1.4 பில்லியன் கொள்வனவாளர்களின் தீர்மானங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய இந்த ஆய்வு, இந்த வர்த்தகநாமங்கள் ஒவ்வொன்றும் எத்தனை வீடுகளில், எத்தனை தடவைகள் கொள்வனவு செய்யப்படுகின்றன எனும் அடிப்படையில் தரப்படுத்தல் முன்வைக்கப்பட்டுள்ளது.

நெஸ்லே நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஷிவானி ஹெக்டே அவர்கள் குறிப்பிடுகையில், *"எமது வர்த்தகநாமங்கள் அனைத்தும் 'வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தி ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு பங்களிப்புச் செய்தல்' என்ற பகிரப்பட்ட நிறுவன குறிக்கோளை அடியொற்றுவதில் தீவிர அர்ப்பணிப்புடன் உள்ளன. எமது வர்த்தகநாமங்கள் பேணிப் பாதுகாத்து வருகின்ற உள்ளார்ந்த விழுமியங்களைப் போற்றும் நுகர்வோர் எமது உற்பத்திகளை கொள்வனவு செய்து வருகின்றனர். சுவையான, ஆரோக்கியமான மற்றும் உயர் தரம் கொண்ட உற்பத்திகளை தயாரிப்பதன் மீது நாம் கொண்டுள்ள அர்ப்பணிப்புடனான ஈடுபாடு மற்றும் நிலைபேண் தகைமை கொண்ட உற்பத்தி நடைமுறை மற்றும் தொழில் தர்மத்தைப் பின்பற்றும் தொழிற்பாடுகள் மீது நாம் கொண்டுள்ள தீவிர ஈடுபாடு ஆகியவற்றிற்கு அவர்கள் மதிப்பளிக்கின்றனர். இலங்கையில் முதல் 10 இடங்களிலுள்ள விரைவாக விற்றுத் தீருகின்ற நுகர்வோர் உற்பத்தி வர்த்தகநாமங்களில் எமது வர்த்தகநாமங்கள் இரண்டும் தரப்படுத்தப்பட்டுள்ளமை எமக்கு மிகுந்த கௌரவத்தை அளிப்பதுடன், நுகர்வோரின் வாழ்வில் எமது உற்பத்திகள் வழங்கும் அர்த்தமுள்ள பங்களிப்புக்கள் மற்றும் நாம் சம்பாதித்துள்ள நம்பிக்கை ஆகியவற்றை இது பிரதிபலிக்கின்றது,"* என்று கூறினார்.

*Maggi*, தனது பிரபலமான சிக்கன் சுவையூட்டப்பட்ட நூடில்ஸ் உற்பத்திகளின் சுவையை மேம்படுத்துவதற்கு எட்டுக்கும் குறையாத வாசனைத்திரவியங்களை சேர்ப்பித்து, அண்மையில் தனது உற்பத்திகளுக்கு புது வடிவத்தை கொடுத்திருந்தது கறி வகைகள் மற்றும் ஏனைய உள்நாட்டு உணவு வகைகளில் இயற்கையான சுவையூட்டிகளாக வாசனைத்திரவியங்களை உபயோகிக்கும் இலங்கையில் தமது நூடில்ஸ் உற்பத்திக்கு புது வடிவம் கொடுப்பதற்கும் அதே வழிமுறையையே *Maggi* கைக்கொண்டுள்ளது. அது மரக்கறிகள் மற்றும் மூலிகைகளை உபயோகிப்பதுடன், இலங்கையில் சமையலறைகளில் பாரம்பரியமாக உபயோகிக்கப்படுகின்ற கொத்தமல்லி, மிளகு, மஞ்சள், ஏலக்காய், சீரகம், ஜாதிக்காய் மற்றும் வெந்தயம் போன்ற பிரபலமான வாசனைத்திரவியங்களையும் உபயோகிக்கின்றது. அன்றாட சமையலின் அனைத்து சுவையூட்டல் தேவைகளுக்கும் பயன்படுத்துவதற்கு தயாரிக்கப்படுகின்ற *Maggi Rasa Musu* வெள்ளைப்பூண்டு மற்றும் மிளகாய், மஞ்சள், சீரகம், ஜாதிக்காய் மற்றும் வெந்தயம் போன்ற வாசனைத்திரவியங்களின் தனித்துவமான கலவையைக் கொண்டுள்ளது. பல தலைமுறைகளாக இலங்கையின் வீடுகளில் விரும்பப்படும் ஒரு உற்பத்தியாகத் திகழ்ந்து வருகின்ற *Maggi* தேங்காய்ப் பால்மா, புத்தம்புதிய மற்றும் அற்புதமான சுவையை உறுதிப்படுத்துவதற்காக பிரத்தியேகமாக இலங்கையில் உற்பத்தியாகும் தேங்காய்களைக் கொண்டு தயாரிக்கப்படுகின்ற உயர் தர தேங்காய்ப் பால் உற்பத்தியாக வீட்டில் சமைக்கும் உணவின் நலனை ஊக்குவித்து வருகின்றது.

*Nestomalt* உற்பத்தியும் சமீபத்தில் அனைத்தும் புதிய *Nestomalt Plus* என்ற உற்பத்தியை அறிமுகப்படுத்தி தனது ஊட்டச்சத்து உள்ளடக்கத்தை மேலும் மேம்படுத்தியுள்ளது. ஓட்ஸ் தானியத்தின் மேம்பட்ட நலச்செழுமை கொண்ட இப்புதிய பான வகை உற்பத்தியானது நவீன யுகத்தில் நுகர்வோரின் வேலைப்பளுவிற்கு மத்தியில், அவர்கள் உடற்பயிற்சி மிக்க வாழ்க்கைமுறையை முன்னெடுக்க உதவும் வகையில் பிரத்தியேகமாக உற்பத்தி செய்யப்பட்டு

வருகின்றது. அது விட்டமின்கள் மற்றும் கனியுப்புக்களைக் கொண்டுள்ளதுடன், மோல்ற்று சாறு, ஓட்ஸ் மற்றும் பால் கொண்ட அதன் தனித்துவமான கலவைக்கு தண்ணீரை மட்டுமே சேர்க்க வேண்டும்.

ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு பங்களிப்பதன் மீது நிறுவனம் காண்பிக்கும் அர்ப்பணிப்புடனான ஈடுபாடு, அதன் வர்த்தகநாம செயற்பாடுகள் மூலம் காணக் கிடைக்கின்றது. பக்கட்டில் பொறிக்கப்பட்ட மற்றும் இணையத்தின் மூலமான ஆலோசனைகள் மற்றும் உணவு தயாரிப்பு முறைகள் மூலமாகவும், *Maggi* Rasa Charika சமையல் கண்காட்சிகள் போன்ற உள்நாட்டு நிகழ்வுகள் மூலமாகவும் ஆரோக்கியமான உணவின் ஒரு பகுதியாக மக்கள் சுவையான உணவைத் தயாரிப்பதற்கு *Maggi* உதவி வருகின்றது. பிரமாண்டமான குடும்ப நிகழ்வுகளை ஏற்பாடு செய்தும், ஆண்டுதோறும் பாரம்பரிய பண்டிகை விளையாட்டுக்களுக்கு அனுசரனை வழங்கியும், மரதன் ஓட்டப்போட்டிகளுக்கு வலுவூட்டியும் ஆரோக்கியமான மற்றும் அதிக உடற்பயிற்சி கொண்ட வாழ்க்கைமுறையை உள்நாட்டு சமூகங்கள் முன்னெடுப்பதற்கு *Nestomalt* நீண்ட காலமாக உதவி வந்துள்ளது.

வர்த்தகநாமத்தின் தனிச்சிறப்பு தொடர்பில் Kantar முன்னெடுத்துள்ள விரிவான மற்றும் உள்ளார்ந்த ஆய்வு முடிவுகள், நிச்சயமற்ற மற்றும் சவால்மிக்க காலகட்டங்களிலும் வலுவான வர்த்தகநாமங்களின் வளர்ச்சி ஆணித்தரமாக உள்ளதுடன், அதிக அளவான கொள்வனவாளர்கள் அவற்றை அதிக தடவைகள் தெரிவுசெய்வதை தொடர்ந்தும் கடைப்பிடிப்பதைக் காண்பிக்கின்றன.